THE HON. SRI P. KAKKAN: This Government have suggested to the Government of India that funds shoud be provided to sanction scholarships to all eligible students whose parents' income is Rs. 1,500, during the Fourth Plan period.

திரு. எம். எஸ். செல்வராஜன் : வருமான வரம்பு 2,000, 2,500 ரூபாய் என்று இருந்தாலும் சென்ற ஆண்டு லோ இன்கம் குரூப்பின் கீழ் இந்த ராஜ்யத்தைப் பொறுத்தமட்டில் வருஷத்திற்கு 360 ரூபாய் வருமானம் உள்ளவர்களுக்கு மட்டுந்தான் இந்த ஸ்காலர்ஷிப் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் அரசாங்கம் எத்தனை சத விகிதம் பேருக்கு இந்த ஸ்காலர்ஷிப் கொடுத்திருக்கிறது என்பதைத் தெரிவிப்பார்களா? இதைக் கூடுதலாகப் பெருக்கிக் கொடுக்க என்ன வழிவகைகள் செய்திருக்கிறார்கள்?

கனம் திரு. பூ. கக்கன் : வருஷந்தோறும் ரூ. 14,00,840 மத்திய அரசாங்கத்திலிருந்து ஸ்காலர்ஷிப்புக்காகக் கொடுக்கிறார்கள். கடந்த வருஷம் 360 ரூபாய் வருமானம் உள்ளவர்களுக்குத்தான் இந்த ஸ்காலர்ஷிப் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1,140 பேருக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் திரு. மதியழகன் கேள்விக்குப் பதில் சொல்லும்போதே சொன்னேன்.

This Government have suggested to the Government of India that funds should be provided to sanction scholarships to all the eligible students.

ஆண்டு ஒன்றுக்கு 1,500 ரூபாய் வரை வருமானம் உள்ள எல்லோருக்குமே ஸ்காலர்ஷிப் கொடுக்கலாம் என்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

விதவைகளுக்குத் தொழிற்பயிற்சி

* 12 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விதவைகளுக்கு தொழிற்பயிற்சி அளிப்பதற்கு திட்டம் ஏதேனும் வகுக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) விதவைகளுக்கு மாத்திரம் என்று தொழிற் பயிற்சி அளிக்க தனிப்பட்ட திட்டம் எதுவும் கிடையாது.

(இ) விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், மற்றும் பொதுவாக ஆதரவற்றவர்கள் போன்றவர்களுள், வயது வந்த பெண்களுக்கு தாம்பரம் பணிப்பயிற்சி மனையில் தையல் தொழிற் பயிற்சியும், பாய் முடைதலும் கற்றுக் கொடுக்கப்படுகின்றன.

திரு. து. ப. அழகமுத்து : இது போன்ற நிலையங்களை எல்லா மாவட்ட தலைநகரங்களிலும் வைக்க சர்க்கார் முயற்சி எடுக்குமா?

1st August 1966]

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே, இவற்றைச் சில ஜில்லாக்களிலும் வைக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டு தஞ்சை, கடலூர் ஆகிய இடங்களில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : நம்முடைய மாநிலத்திலிருந்து அந்நிய நாட்டுச் செலாவணியைப் பெற்றுத் தருகிற அப்பளம், ஊறுகாய் போன்றவற்றைத் தயாரிப்பதற்கு பயிற்சி கொடுத்து அவற்றை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்வதற்கான செயல் குறிப்பை இந்த அரசாங்கம் தயார் செய்திருக்கிறதா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஏற்கனவே உள்ள மாதர் சங்கங்களே ஊறுகாய், அப்பளம் போன்றவற்றைத் தயாரிப்பதற்குப் பயிற்சி அளிக்கிறார்கள். 'ஹோல்டால்' கூடச் செய்வதற்குப் பயிற்சி கொடுக்கிறார்கள். தரமான ஊறுகாய், அப்பளம் தயார் செய்தால் அந்நியச் செலாவணி பெற வழி இருக்கிறது.

ஸ்டவ் அடுப்பு வெடிப்பால் உயிரிழந்தோர்

* 13 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1964-65-ல் சென்னை நகரில் ஸ்டவ் அடுப்பு வெடித்து ஆபத்தான நிலைமையில் மருத்துவ மனைகளி அனுமதிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

(இ) அவர்களில் உயிரிழந்தவர்கள் எத்தனை பேர் ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (a) Nil.

(b) Does not arise.

திரு. ஆ. தங்கவேலு : ஸ்டவ் அடுப்பில் காற்று அடிப்பதற்கு இவ்வளவுதான் அடிக்கவேண்டுமென்பதற்கு 'கேஜ்' இல்லாத காரணத்தால் அது வெடித்து அநேகம் பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த ஸ்டவ் அடுப்பைத் தடைப்படுத்த அரசாங்கம் முன் வருமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : மூலக் கேள்விக்குப் பதில் சொல்லும்போது 1965-66-ல் இந்த மாதிரி விபத்து ஒன்றும் ஏற்படவில்லை என்று சொன்னேன். ஏதோ கெரசின் விளக்குகளில் இருந்து தீப்பிடித்து விபத்து ஏற்படுவதைப் பற்றிக் கனம் அங்கத்தினர் கூறுகிறார் போல் இருக்கிறது.

Wild life sanctuary at Kodikarai

* 14 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state whether the Government have proposed to set up a wild life and bird sanctuary at Kodikarai of Thanjavur district with tourist attraction?